Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 138/2026** |
| Deposition of witness for | :: | **PW. 3** |
| Name | :: | **சுசிக்குமார் (தலைமை காவலர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**
**15.06.2026**
**முதல் விசாரணை**:

1. நான் தற்போது மல்லாங்கிணர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் உள்ளேன். கடந்த 06.12.2025 தேதி 11.30 மணியளவில் நான் அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது சிறப்பு சார்பு ஆய்வாளர் மணிகண்டன் அவர்களுடன் நான் மற்றும் தலைமை காவலர் மாரிமுத்து ஆகியோர்கள் அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலைய சரகத்தில் மது, சூது சம்மந்தமாக ரோந்து சுற்றி கண்காணித்து கட்டங்குடி பகுதியில் வந்தபோது சிறப்பு சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கட்டங்குடி பஸ்ஸ்டாப் அருகே வந்தபோது சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த நபர் எங்களை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரித்தபோது முன்னுக்கு பின் முரணாக கூறியவர் பின்னர் அவரது பெயர் கருப்பசாமி என்றும் அரசு மதுபான கடையில் கொஞ்சம் கொஞ்சமாக மதுபாட்டில்களை வாங்கி விற்பனை செய்ய வைத்திருப்பதாக கூறி சுமார் 180 மிலி அளவுள்ள EXPRESS BRANDY – 27 பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்தார்.

2. மேற்படி மதுபாட்டில்களை எந்தவொரு அரசு அனுமதியும்

உரிமமும் இல்லாமல் லாப நோக்கத்துடன் விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்திற்காக அந்த நபரை சிறப்பு சார்பு ஆய்வாளர் கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும் அவர் வைத்திருந்த மது பாட்டில்களை அத்தாட்சியில் கைப்பற்ற தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் சிறப்பு சார்பு ஆய்வாளர் போலீஸ் பார்ட்டியாகிய எங்கள் இருவர் முன்னிலையில் 11.45 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் தலைமை காவலர் மாரிமுத்துவும் சாட்சி கையெழுத்து செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான்.

**3.** பின்னர் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் 13.00 மணிக்கு நிலையம் வந்து எதிரி கருப்பசாமி மீது குற்ற எண். 261/2025 பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட நடவடிக்கைகளுக்கு சிறப்பு சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவ இடமானது பொதுமக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும் எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. பொதுமக்கள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படாத காரணத்தினால் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் நான் கையொப்பம் செய்துவிட்டு உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. காவல் நிலைய கையிருப்பில் உள்ள மதுபாட்டில்களை எங்கள் உயர் அதிகாரி கேட்டு கொண்டதற்கு இணங்க எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 138/2026** |
| Deposition of witness for | :: | **PW. 1** |
| Name | :: | **மாரிமுத்து (தலைமை காவலர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**
**15.06.2026**
**முதல் விசாரணை**:

1. நான் தற்போது அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் உள்ளேன். கடந்த 06.12.2025 தேதி நான் தாலுகா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது , காலை 11.30 மணியளவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் மணிகண்டன் அவர்களுடன் நான் மற்றும் தலைமை காவலர் சுசிக்குமார் ஆகியோர்கள் அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலைய சரகத்தில் மது, சூது சம்மந்தமாக ரோந்து சுற்றி கண்காணித்து கட்டங்குடி பகுதியில் வந்தபோது சிறப்பு சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கட்டங்குடி பஸ்ஸ்டாப் அருகே வந்தபோது சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த நபர் எங்களை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரித்தபோது முன்னுக்கு பின் முரணாக கூறியவர் பின்னர் அவரது பெயர் கருப்பசாமி என்றும் அரசு மதுபான கடையில் கொஞ்சம் கொஞ்சமாக மதுபாட்டில்களை வாங்கி விற்பனை செய்ய வைத்திருப்பதாக கூறி சுமார் 180 மிலி அளவுள்ள EXPRESS BRANDY – 27 பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்தார்.

2. மேற்படி மதுபாட்டில்களை எந்தவொரு அரசு அனுமதியும்

உரிமமும் இல்லாமல் லாப நோக்கத்துடன் விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்திற்காக அந்த நபரை சிறப்பு சார்பு ஆய்வாளர் கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும் அவர் வைத்திருந்த மது பாட்டில்களை அத்தாட்சியில் கைப்பற்ற தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் சிறப்பு சார்பு ஆய்வாளர் போலீஸ் பார்ட்டியாகிய எங்கள் இருவர் முன்னிலையில் 11.45 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் தலைமை காவலர் தலைமை காவலர் சுசிக்குமாரும் சாட்சி கையெழுத்து செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். **(அத்தாட்சி அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**3.** பின்னர் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் 13.00 மணிக்கு அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையம் வந்து எதிரி கருப்பசாமி மீது குற்ற எண். 261/2025 பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட நடவடிக்கைகளுக்கு சிறப்பு சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவ இடமானது பொதுமக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும் எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. பொதுமக்கள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படாத காரணத்தினால் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் நான் கையொப்பம் செய்துவிட்டு உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. காவல் நிலைய கையிருப்பில் உள்ள மதுபாட்டில்களை எங்கள் உயர் அதிகாரி கேட்டு கொண்டதற்கு இணங்க எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 138/2026** |
| Deposition of witness for | :: | **PW. 2** |
| **Name** | :: | **மணிகண்டன் (சிறப்பு சார்பு ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். இல்லை. பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**
**15.06.2026**
**முதல் விசாரணை**:

1. நான் தற்போது அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 06.12.2025 தேதி 11.30 மணியளவில் நான் மற்றும் தலைமை காவலர்கள் சுசிக்குமார், மாரிமுத்து ஆகியோர்கள் அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலைய சரகத்தில் மது, சூது சம்மந்தமாக ரோந்து சுற்றி கண்காணித்து கட்டங்குடி பகுதியில் வந்தபோது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கட்டங்குடி பஸ்ஸ்டாப் அருகே வந்தபோது சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த நபர் எங்களை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரித்தபோது முன்னுக்கு பின் முரணாக கூறியவர் பின்னர் அவரது பெயர் கருப்பசாமி என்றும் அரசு மதுபான கடையில் கொஞ்சம் கொஞ்சமாக மதுபாட்டில்களை வாங்கி விற்பனை செய்ய வைத்திருப்பதாக கூறி சுமார் 180 மிலி அளவுள்ள EXPRESS BRANDY – 27 பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்தார்.

2. மேற்படி மதுபாட்டில்களை எந்தவொரு அரசு அனுமதியும் உரிமமும் இல்லாமல் லாப நோக்கத்துடன் விற்பனை செய்வதற்காக

வைத்திருந்த குற்றத்திற்காக அந்த நபரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்தேன். எதிரி வைத்திருந்த மது பாட்டில்களை அத்தாட்சியில் கைப்பற்ற தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் என்னுடன் ரோந்து பணிக்கு வந்த தலைமை காவலர்கள் மாரிமுத்து, சுசிக்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் 11.45 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றி சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றேன்.

**3.** பின்னர் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் 13.00 மணிக்கு அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையம் வந்து எதிரி கருப்பசாமி மீது குற்ற எண். 261/2025 பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் அத்தாட்சியை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். பின்னர் எதிரியை நிலைய பாரா வசம் ஒப்படைத்தும் வழக்கு கோப்பினை விசாரணைக்காக சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். சார்பு ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவ இடமானது பொதுமக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். எதிரியிடமிருந்து மதுபானங்கள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் சமயத்தில் வீடியோ பதிவு எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் எதிரியிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டு இருந்தால் அவற்றை நான் வீடியோ பதிவு செய்திருப்பேன் என்றாலும் சம்பவம் எதுவும் நடைபெறாத காரணத்தில் தான் வீடியோ பதிவு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. பொதுமக்கள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படாத காரணத்தினால் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து அத்தாட்சி தயார் செய்து அதில் சாட்சிகளிடம் கைபொய்ப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**